நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC /51/2024

வழக்கு சாட்சி : L.W.5 – PW .3

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துஅடைக்கலசாமி |
| கணவர் பெயர் | : | நடராஜன் |
| கிராமம் | : | நாகப்பட்டினம் |
| வயது | : | 54 / 2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **22.05.2026**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை )

**முதல் விசாரணை :**

நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து மீன் பிடித்தல் தொழில் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 தற்சமயம் வெளிநாட்டில் உள்ளார், அசா.1 மற்றும் 2 ஐ எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்களில் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை. போலிசார் என்னை விசராணை செய்யவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 18.10.2020 ஆம் தேதி 05.30 மணிக்கு அசா.1 க்கும் எதிரிகளுக்கும் நடந்த சண்டை சம்பந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான்

சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன் என்றும் போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி எந்தவித குற்ற செயலிலும் ஈடுபடவில்லை நான் அதை பார்க்கவும் இல்லை.